தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 7, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஆகஸ்ட் 23, திங்கட்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு."

ஆறு, கடல் எனும் இருபுனலும், வளர்ந்தோங்கி நீண்டமைந்த மலைத் தொடரும், வருபுனலாம் மழையும், வலிமைமிகு அரணும், ஒரு நாட்டின் சிறந்த உறுப்புகளாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை-NH-45C, விக்கிரவாண்டி-பின்னலூர் நான்கு வழிச் சாலை, பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. சென்னை–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை–NH–45C, விக்கிரவாண்டி முதல் பின்னலூர் வரையுள்ள நான்கு வழிச் சாலை*

பணிகளை விரைந்து முடிக்க வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சபா. இராசேந்திரன், திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து ஒருவர் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாபெரும் சபைதனிலே மூன்றாவது முறையாக, சட்டமன்ற உறுப்பினராக என்னை அமர்த்தி, பணியாற்றிட வாய்ப்பு வழங்கியிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை-கும்பகோணம் நெடுஞ்சாலை, விக்கிரவாண்டி முதல் தஞ்சாவூர் வரையிலான 180 கிலோ மீட்டர் நெடுஞ்சாலை கடந்த 2014 ஆம் ஆண்டு NH-45C தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டது. அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபோது அந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களினால் டெண்டர் விடுவதிலே காலதாமதம் ஏற்பட்டு, 2019 ஆம் ஆண்டு டெண்டர் விடப்பட்டு, இப்பணி கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கேட்பாரற்றுக் கிடந்தது. Reliance Infrastructure Limited என்ற நிறுவனம் இந்தப் பணியை எடுத்திருக்கிறது. 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு நெய்வேலி தொகுதியிலே அந்த தேசிய நெடுஞ்சாலை இருக்கின்றது. இந்தப் பணி மந்தமாக நடைபெற்று, இப்போது முழுவதுமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்தப் பணியை அந்த நிறுவனம் விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன்,

மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களைத் தொடர்ந்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும் ஏற்கெனவே இதுகுறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். சென்னை-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை-NH-45C, விக்கிரவாண்டி முதல் பின்னலூர் வரையிலான சாலை, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 164 கிலோ மீட்டர் நீளமுடைய சாலையாகும். இது மூன்று தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. தொகுப்பு-I விக்கிரவாண்டி முதல் சேத்தியாதோப்பு வரையுள்ள நீளம் 66 கிலோ மீட்டர் ஆகும். Reliance Infrastructure Limited என்கிற மும்பையைச் சேர்ந்த நிறுவனத்தார் ரூ.711 கோடி மதிப்பிலான அந்தப் பணிக்கான டெண்டரை எடுத்தார்கள். 7-4-2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 20-3-2018 அன்று இதற்கான வேலை துவக்கப்பட்டது. வீராணம் ஏரியின் தண்ணீர் போகின்ற குழாயினை மாற்றியமைப்பதற்கான பணிகளில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. மேலும், நிலம் கையகப்படுத்துவதிலும் தாமதம் ஏற்பட்டது. இதுதவிர, COVID-19 என்கிற கொரோனா பெருந்தொற்றின் காரணத்தினால் காலதாமதம் ஏற்பட்டது. ஆக, கிட்டத்தட்ட 470 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை அறிந்து, அதற்கு நீட்டிப்பும் கொடுக்கப்பட்டது. இப்பணி 31-12-2021-ல் முடிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்ததாரர்கள் இதில் போதிய முன்னேற்றம் காட்டாமல், அப்படியே கிடப்பிலே போட்ட காரணத்தினால், ஒப்பந்தக் காலத்திற்கு முன்னதாகவே பழைய ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளலாம், புதிய ஒப்பந்தத்தை அழைக்கலாம் என்ற அடிப்படையிலே, Reliance Infrastructure Limited என்கிற மும்பை நிறுவனத்திற்கு 22-6-2021 அன்று ஒப்பந்த முறிவுக்கான முன்னறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து மறு ஒப்பந்தப்புள்ளியை கோருவதற்கான முன் நடவடிக்கையை எடுப்பதற்கு National Highways Authority of India (NHAI) நிறுவனம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது. நம்முடைய அரசின் சார்பாகவும், சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகளை அழைத்துப் பேசியிருக்கிறேன். அந்தப் பணி அங்கே நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடு உடனடியாக செய்யப்படும்.

முற்பகல் 10-05